# அனைவருக்கும் பீமா யோஜனா (ஏஏபீஒய்)
## (Aam Admi Bima Yojana)

பொதுவானவை (GENERAL):

எல்.ஐ.சீ மூலமாக இந்த திட்டம் நிர்வாகிக்கப்படும்.

காப்பிடு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சார்பாக திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களில் மாநில / யூனியன் பிரதேச அரசுகள் மைய முகவர்களாக செயல்படுவார்கள்.

தகுதி (ELEGIBILITY):

18 வயது முதல் 59 வயதுக்கு உட்பட்டவராக உறுப்பினர் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர் ஒருவராகவோ அல்லது கிராமப்புறத்தைச் சேர்ந்த நிலமற்ற விவசாய குடும்பத்தின் தலைவராகவோ உறுப்பினர் இருத்தல் வேண்டும்.

பயன்கள் (BENEFITS) : காப்பிடு முடிவடையும் தேதிக்கு முன்னர் மரணம் நிகழும் பொழுது, காப்புறுதி தொகையான ரூபாய் Rs. 30,000/- வாரிசுதாரருக்கு கொடுக்க வேண்டியிருக்கும்

விபத்துக்கான பயன்கள் : விபத்தினால் மரணம் நிகழும் பட்சத்தில் அல்லது முழுமையாக / பகுதியாக ஊனம் ஏற்பட்டு சம்பாதிக்க இயலாத நிலை ஏற்படும் பொழுது பின்வரும் பயன்களை பெறக் கூடியவையாகும்.

A) விபத்தினால் மரணமடையும் பொழுது ரூ. 75,000/- அளிக்கப்படும்.
B) விபத்தின் காரணமாக நிரந்தர முழுமையான ஊனத்திற்கு ரூ. 76,000/- அளிக்கப்படும்.
C) விபத்தில் இரு கண்கள் மட்டும் அல்லது கைகள் இரண்டும் அல்லது கால்கள் இரண்டும் அல்லது ஒரு கண் மற்றும் கை அல்லது கால் ஒன்று இழக்கும் தருவாயில் ரூ. 75,000/- அளிக்கப்படும்.
D) விபத்தினால் ஒரு கண் மற்றும் கை அல்லது கால் ஒன்று இழக்கும் தருவாயில் ரூ.37,500/-. அளிக்கப்படும்.

கல்வி உதவித் தொகை (SCHOLARSHIPS): 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் ஏ.ஏ.பீ.ஒய் உறுப்பினர்களின் குழந்தைகள் இருவருக்கு அதிகபட்சமாக மாதத்திற்கு ரூ. 100/- கூடுதலான கல்வி உதவித் தொகை இந்த திட்டத்தின் கீழ் அளிக்கப்படும். இந்த கல்வி உதவித் தொகை ஆறு

மாதத்திற்கு ஒரு முறை அளிக்கக் கூடியதாக ஜூலை 1 ஆம் தேதி மற்றும் ஜனவரி 1 ஆம் தேதி ஒவ்வொரு வருடமும் அளிக்கப்படும்.

பிரிமியம் (PREMIUM): இந்த திட்டத்திற்கான பிரிமியமாக ரூ. 200/- இருக்கும், இதில் 50% மத்திய அரசாங்கம் இதற்கென ஒதுக்கியிருக்கும் நிதியிலிருந்து மானியமாகவும், மீதமுள்ள 50% மாநில அரசினால் மானியமாக அளித்து செலுத்தப்படும்.

இந்தியாவின் தேசிய வலைதளத்தில் பிரசுரிக்கப்பட்டது (http://www.india.gov.in)